## அஞ்சலி



# காரை. செ. சுந்தரம்பிள்ளை

*மறைவு : 21.09.2005*

ஈழத்தின் கலை இலக்கியப் புலத்தில் கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கும் அதிகமாக பணிசெய்த கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை என்ற ஆளுமைமிக்க மனிதனின் மறைவு மனதினை வருத்துகின்றது. 'காரை' என்ற சொல்லுக்குள் காரை நகரையும், கலையையும் அடையாளப்படுத்தி நின்ற இந்த கலை இலக்கியவாதியின் மறைவு, இலையுதிர்காலம் போல் இவ்வருட 'கலையுதிர்' இழப்புகளின் கனதியை மேலும் அதிகரித்துவிட்டது.

கவிஞனாய், பேச்சாளனாய், நடிகனாய், நெறியாளனாய், ஆய்வாளனாய், ஆசிரியனாய், நிர்வாகியாய் பல பாத்திரங்களை வாழ்வியலில் தாங்கி, தன் பன்முக ஆளுமை வீச்சை ஈழத்திற்குப் பயன்தரும் வகையில் வழங்கிச்சென்ற அமரர் காரை. சுந்தரம்பிள்ளை வரலாற்றில் படைப்புக்களாலும் பணியாலும் காலம் கடந்தும் வாழப்போகின்றவர்.

குறிப்பாக, நாட்டார் இலக்கியத்திற்கும், கூத்துக் கலைக்கும் அவர் ஆற்றிய பணி அளவிடற்கரியது. 'வடபுல நாட்டார் அரங்கு', 'ஈழத்து இசைநாடக வரலாறு', 'நடிகமணி வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும்' போன்ற அவரது ஆய்வு நூல்களும், நூற்றுக்கணக்கான கட்டுரைகளும் எமது பாரம்பரிய அரங்க வடிவங்களின் வேர்களை அடையாளப்படுத்தியது மட்டுமன்றி எமது தொன்மைகளுக்குச் சான்று கூறிநிற்கின்ற ஆதாரங்களாகவும் திகழ்கின்றன. இவற்றின் நீட்சியாக அவர் எழுதிய 'சிங்கள பாரம்பரிய அரங்கு', 'மலையகக் கூத்துக்கள்' போன்றதான நூல்களும் தமிழ் அரங்கிற்கு வளம்சேர்த்து நிற்கின்றன.

இவை மட்டுமன்றி 'கூத்துக் கலையை' வளர்த்தெடுப்பதற்கும், அதன் வடிவ சாஸ்திரியத்தை மீள் கண்டுபிடிப்புச் செய்வதற்கும் அவர் எடுத்த முயற்சிகள் ஒரு பரந்த செயற்களங்களின் தொடக்கங்களாக நிற்கின்றன.

இவற்றிற்கப்பால் ஈழத்தின் கவியரங்கப் பாரம்பரியத்தில் மரபுக் கவிஞனாய் மேடைகளை அலங்கரித்து ஆர்வலர்களை வசீகரித்துக்கொண்ட இவரின் கவிதைகளும், 'சங்கிலியம்', 'காவேரி'... போன்ற காவியங்களும் எமது மரபுவழிக் கவிதை இலக்கியத்தில் பெறுமதி மிக்கவையாகத் திகழ்கின்றன. கல்லூரிகளிலும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும், பல்கலைக்கழகத்திலும் இவரிடம் பயின்ற பலர் இன்று 'ஆளுமை நிறைந்தவர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். 'இந்துசமய தத்துவங்களை' ஆழக்கற்று அதனை அவர் அடுத்த சந்ததிக்கு அளித்த வகை மறக்கக்கூடியதல்ல.

இந்த செயல் வெளிப்பாடுகளின் ஒரு அங்கமாக அவர் திருமறைக் கலாமன்றத்திற்கு ஆற்றிய பணிகளும் அமைகின்றன. 1989க்குப் பின் திருமறைக் கலாமன்றம் தன்னை ஒரு பண்பாட்டு நிறுவனமாக மாற்றிக்கொண்டு செயற்பட்டகாலம் முதல் அவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த இறுதிக்காலம் வரை மன்றத்தின் செயற்பாடுகளுக்கு அர்ப்பணிப்புடன் ஊக்கமளித்து வந்தார். குறிப்பாக, பாரம்பரியக் கலை வடிவங்களான நாட்டுக்கூத்து, இசைநாடகம், கிராமிய நடனங்கள் போன்றவற்றை பேணவும், புத்தாக்கம் செய்யவும் திருமறைக் கலாமன்றம் முற்பட்டபோது மன்றத்திற்கு தனது முழுமையான ஆதரவையும், ஆலோசனைகளையும் தந்து நின்றார். மன்றம் நடத்திய, கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், பயிலரங்குகள் போன்ற பலவற்றிற்கும் வந்து கருத்துக்களை வழங்கியதுடன் மன்றம் நடத்திய, முத்தமிழ் விழாக்கள், நாட்டுக்கூத்து விழாக்கள், இசைநாடக விழாக்கள், நாட்டுக்கூத்துப் போட்டிகள் போன்ற பலவற்றிற்கும் தனது பங்களிப்புக்களை வழங்கினார். அவரது 'பாஞ்சாலி சபதம்' நாட்டுக்கூத்து மன்றம் நடத்திய கூத்துவிழா ஒன்றில் மேடையேற்றப்பட்டு பலரின் பாராட்டுக்களைப் பெற்றது. அதுமட்டுமன்றி மன்றத்தின் வெளியீடுகளான 'கலைமுகம்', 'ஆற்றுகை' போன்ற சஞ்சிகைகளுக்கு அவர் வழங்கிய ஆக்கங்கள் பெறுமதிமிக்கவை. 'கலைமுகம்' ஆடி – புரட்டாதி 1994, 13 ஆவது இதழில் அவரது நேர்காணல் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், கத்தோலிக்க கூத்துமரபின் ஆடல்களை மீள் கண்டுபிடிப்புச் செய்வதற்கு மன்றம் முயன்றவேளை, அவர் அளித்த ஆலோசனைகளும், அதற்காக அவர் வழங்கிய வளமூலங்களும் பெறுமதிமிக்கவை. மொத்தத்தில் திருமறைக் கலாமன்றத்தின் இரசிகனாய், ஆதரவாளனாய், வள ஆளுனனாய் பல தளங்களில் பின்னணியில் நின்ற அமரர் காரை சுந்தரம்பிள்ளை ஈழத்தின் கலை இலக்கிய புலத்திலும், மன்ற வரலாற்றிலும் மறக்கப்படமுடியாத ஒருவராவார். ✪

**யோவான்**

---

● புகழ்பூத்த தமிழ் அறிஞனாகவும், சொற்பொழிவாளனாகவும் விளங்கியதுடன் ஆசிரியராக, உப அதிபராக பணியாற்றி தலைமுறைகள் பலவற்றால் அறியப்பட்ட பேராசானும், அகில இலங்கை கம்பன் கழகத்தை ஸ்தாபித்து வழிநடத்தியவருமான சைவத் தமிழ் வித்தகர் கனபதிப்பிள்ளை சிவராமலிங்கப்பிள்ளை 25.08.2005 இல் அமரத்துவம் அடைந்தார்.

● ஒரு காலத்தில் பரபரப்புடன் பார்க்கப்பட்ட 'தீப்பொறி', 'ஒரு தீப்பொறி' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகவும், தமிழில் உள்ள புலமையால் இறுதிக் காலம் வரை கவனத்தை ஈர்க்கதக்க ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை எழுதியவருமான 'சொல்லேருழவர்' ம.க.அ. அந்தனிசில் 09.07.2005இல் காலமானார். சிறந்த கதகளி நாட்டியக் கலைஞராகவும், நடிகராகவும்கூட விளங்கியவர் இவர்.

தம் வாழ்வாலும் பணிகளாலும் இம் மண்ணிற்கு வளம் சேர்த்த இவர்களுக்கும் 'கலைமுகம்' தனது அஞ்சலிகளை செலுத்துகின்றது.